Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 104/15

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமகிருஷ்ணன் | Father/Husband Name | : சோமசுந்தரம் |
| Age | : | Calling | : |
| Date | : 23.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 04 day of 02.2026

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது தீவிரவாத தடுப்பு பிரிவு தலைமையகம் சென்னையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னாள் மேலூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 17.10.2012ம் தேதி காலை 11.30 மணியளவில் காவ ல் நிலைய பொறுப்பில் இருந்தபோது மேலூர் காவல் நிலைய எல்லைகுட்பட்ட சொக்கம்பட்டியை சேர்ந்த திருமதி.ராஜலெட்சுமி என்பவர் எழுத்துபூர்வமாக கொடுத்த புகார் மனுவை பார்வையிட்டு புகாரின்தன்மை கேற்ப நிலைய குற்ற எண் 785/2012 , இதச பிரிவு 294(b), 323, 354, 506(1)ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **( அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே பகல் 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான பெரியசாமி மற்றும் ராஜா பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **( அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 7 மற்றும் அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**சாட்சிகள் பெரியசாமி மற்றும் ராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான ராஜலெட்சுமி, வள்ளியம்மாள், லெட்சுமி, கருப்பு சாமி ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டதிலிருந்தும், சாட்சிகளை விசாரித்தலும், புகார்மனுவை பார்வையிட்டதிலும், இவ்வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவந்ததால், இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் 19.10.2012ம் தேதி காலை 11.00 மணியளவில் மேலூர், செக்கடி அருகே உள்ள ராசு பெட்டிகடை முன்பு வைத்து இவ்வழக்கின் எதிரியான கண்ணன் என்பவரை காரணம் கூறி கைது செய்து 11.15 மணிக்கு காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்தேன். பின்னர் எதிரியை தக்க ஆவணங்களை தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். எதிரி சண்முகபாண்டி முன் ஜாமீன் பெற்றதால் கைது செய்யவில்லை. இவ்வழக்கை கடந்த 05.12.2012 ம் தேதி எனது புலன்விசாரணை முடித்துக்கொண்டு எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 323, 354, 506(1)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யபட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பு குறுக்குவிசாரணை**

சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து 5 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் புகார் அன்றையதினமே கொடுக்கப்பட்டது. இவ்வழக்கானது சொத்து சம்மந்தமான பிரச்சனையில் அடிப்படையில் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது, அதற்கான ஆவணங்களை பரிசிலனை செய்தேனா என்றால் இல்லை, இவ்வழக்கின் புகார்தாரரும் எதிரிகளும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவத்தில் புகார்தாரருக்கும், அவரது தாயாருக்கும் எந்த ஒரு

காயமோ, வீக்கமோ ஏற்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் கையால் அடித்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சம்பவ இடம் செல்லாமல் வழக்கு ஆவணங்களை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் சிவகங்கைமாவட்டம் மதகுபட்டியில் அழகு நிலையம் வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான், புகார் மனுவில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் சிவகங்கை மாவட்டம், நாமனுரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

2) 2ம் எதிரி சண்முகபாண்டி HIV நோயால் பாதிக்கப்படவர் என்று எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை, நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யமால் தவறுதலாக எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரி கண்ணனை சொன்னதேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியை காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து கைது செய்தேன் என்றால் சரியல்ல.